Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# கோயிற்கட்டடக்கலை மரபு விமானங்களின் வகைகள்

முனைவர் வை.மனோகர்
ஆசிரியப் பணியாளர் , தமிழ்ப் பிரிவு,
பல்கலைக்கழகப் பொறியியல் கல்லூரி, திருக்குவளை.

72

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழர்களின் நாகரிக வளர்ச்சி, அழகியல் அறிவு, நுண்கலைத்திறன் ஒருங்கே கட்டக்கலையின் வாயிலாக அறியலாம். சங்ககால வீடுகள், அரண்மனைகள் கோட்டைகள் பெரும்பாலும் இன்று முழுமையாக காணப்படவில்லை. அதன் எச்சங்களே காணப்படுகின்றன. ஆனால் கோயில்களின் கட்டக்கலை அமைப்பானது இன்றும் நாம் காணக்கூடிய வகையில் உள்ளது. அத்தகைய கோயில் விமானங்களின் வகையினைத் திருநாவுக்கரசர் திருமுறையில் பாடியுள்ளார். விமானங்களின் வகைகளையும் அதன்படி அமைந்த கோயில்களை வகைப்படுத்துவதே ஆய்வின் நோக்கமாக அமைகின்றது.

**திறவுச்சொற்கள்**

விமானங்கள், திருநாவுக்கரசர், கரக்கோயில்

**முன்னுரை**

நாடோடியாக வாழ்ந்த மனிதன் இயற்கை சீற்றத்தில் இருந்து பாதுகாத்துக் கொள்ள குகைகள், மரபொந்துக்களைப் பயன்படுத்திக் கொண்டான். இனக்குழுவாக சேர்ந்து வாழும் பொழுது ஆடைகள் வாழ்விடங்களுக்கானத் தேவை ஏற்படுகிறது. இயற்கையாக அவன் தங்கிய இடங்களில் அமைப்பிலேயே தொடக்க கால வாழ்விடங்கள் அமைத்தான். நகரக் கட்டமைப்புக்குள் வரும்போது தங்களுக்கான வாழ்விட கட்டுமானங்களில் மாற்றம் உண்டாயின. சான்றாக சங்க இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்ட வாழ்விடங்களில் அமைப்பு முறையும், காப்பியங்களில் பதிவு செய்யப்பட்ட வாழ்விட அமைப்பு முறைக்கும் மாற்றம் உண்டு. இத்தகைய மாற்றம் மனித நாகரீகத்தின் வளர்ச்சி படிநிலை எனலாம். இத்தகைய போக்கானது வழிபடும் முறைகளும், வழிபடும் இடங்களின் அமைவிடப் போக்கிலும் மாற்றம் அடைந்ததைக் காணமுடிகிறது.

பெருந்தெய்வ வழிபாட்டிற்கு அடித்தளமாக அமைந்தது நடுகல் வழிபாட்டு மரபாகும். குறிப்பாக இறந்த முன்னோர்களின் நினைவாக கல்லை வைத்து வழிபட்ட மரபானது பிற்காலத்தில் போரில் இறந்த வீரனுக்காவோ, நாட்டிற்காகவோ, அரசனுக்காகவோ, தன் இனக்குழுவிற்காகவோ உயிர்நீர்த்தவர்களின் நினைவாக நடுகல் வைக்கப்பட்டு. அதனை வணங்கத் தொடங்கினர். புறநானுறு இதனை

**இல்லடுகள்ளினசில்குடிச்சீறூர்ப்**
**புடைநடுகல்லினாட்பலியூட்டி**
**நன்னீராட்டிநெய்ந்நறைக்கொளீஇய**
**மங்குன் மாப்புகை மறுகுடன் கமழும் –புறம் 329**

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

நடுகல் வழிப்பாட்டினைப் பற்றி மதுரை அறுவைவாணிகன் இளவேட்டனார் பாடியுள்ளார். நடுகல்லைச் சுற்றி கல்லை அடுக்கி வைப்பதை கல்பதுகை என்பர். கல்பதுகையானது நடுகல்லைக் கோயில் அமைப்பிற்கு இட்டுச் சென்றது எனலாம்.

**பக்திக்காலம்**

நடுகல் வழிபாட்டு மரபானது சங்க இலக்கியங்களிலும் காப்பிய இலக்கியங்களிலும் அற இலக்கியங்களிலும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த வழிபாட்டு மரபானது பெரும் கோயிலாக பக்தி இலக்கிய காலத்தில் உருப்பெற்றன. பக்தி இலக்கிய காலமாக கிபி ஆறாம் நூற்றாண்டு முதல் கிபி பன்னிரெண்டாம் நூற்றாண்டு வரை கூறுவர். முந்தைய காலத்திலும் இக்காலக்கட்டத்திலும் பல வகையான கோயில் கட்டுமானங்கள் கட்டப்பட்டன. இதனை ஆழ்வார்களும் நாயன்மார்களும் தங்களுடைய பக்திப் பனுவல்களில் பாடியுள்ளனர். அதில் திருநாவுக்கரசர் மகேந்திர பல்லவன் காலத்தில் சமண சமயத்தில் இருந்து சைவ சமயத்திற்கு மாறினார். இவருடைய காலம் கிபி ஏழாம் நூற்றாண்டு என்பது தெளிவாகிறது. அக்காலக்கட்ட பல்லவர் கால கட்டுமானங்களையும் சோழர்கால கட்டுமானங்களையும் ஆறாம் திருமுறையில் பதிவு செய்துள்ளார். கோயில் அமைப்பு முறை, விமானங்களின் அமைப்பினைக் கொண்டு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**விமானங்களின் வகைகள்**

கோயில் விமானங்களின் அமைப்பு, உயரம் அமைப்பினைக் கொண்டு சிற்பநூல்கள் பலவகைப்படுத்துக்கின்றன. மயமதம் என்ற சிற்பநூல் “போகம், பத்ரம், விசாலம், சுவஸ்திகம், கரம், கண்டம், தூங்கானை விமானம், சுத்த விமானம், பிருத்தம், கல்யாண சுந்தர விமானம், கோசல விமானம், பத்ய பத்ர விமானம், கந்த விமானம்” (மயமதம்;பக்:82) என பதின்மூன்று வகையினைக் குறிப்பிட்டுள்ளது.

மேலும் விமான உயர அமைப்பினைக் கொண்டு “சாந்திகம், பௌஷ்டிகம், ஜெயதம், அத்புதம், சர்வகாமிதம்” (காசியபம்: பக் 283) என ஐந்துவகைகளாகப் பிரித்துள்ளனர்.

**திருநாவுக்கரசர் குறிப்பிடும் கோயில் (விமானங்கள்)வகைகள்**

கோயிலில்களில் பலவகைகள் உள்ளன என்பதை திருநாவுக்கரசர் தம்முடைய திருப்பாட்டில் பின் வருமாறு குறிப்பிடுகிறார்

**பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்**
**பெருங்கோயில் எழுபதினோடு எட்டும் மற்றும்**
**கரக்கோயில், கடிபொழுதில்சூழ் ஞாழற் கோயில்**
**கருப்பறியற் பொருப்பனைய கொகுடிக்கோயில்**
**இருக்கோதி மறையவர்கள் வழிபட்டேத்தும்**
**இளங்கோயில், மணிக்கோயில் ஆலக் கோயில்**
**திருக்கோயில், சிவனுறையும் கோயில் சூழ்ந்து**
**தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீரம் அன்றே –திருமுறை 6:71:5**

விமானங்களின் வகைகளைச் சிற்பநூலில் வடமொழிப் பெயர்களாக அமைந்துள்ளன. விஜயம், ஸ்ரீபோகம், ஸ்ரீவிசாலம், ஸ்கந்தகாந்தம், ஸ்ரீகரம், ஹஸ்திபிரிஷ்டம், கேசரம் எனும் ஏழு

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

வகைக் கோவில்களின் தமிழ்ப் பெயர்கள் திருநாவுகரசர் பெருங்கோயில், கரக்கோயில், இளங்கோயில், கொகுடிக் கோயில், மணிக்கோயில், ஞாழற்கோயில், ஆலக்கோயில் என வகைப்படுத்தியுள்ளார்.

**பெருங்கோயில்**

பெரிய விமானங்கள், மண்டபங்கள் பெரிய திருச்சுற்றுகள், நீண்டநிலப்பரப்பில் அமைந்த கோயில்களைப் பெருங்கோயில் என்பர். திருவாரூர், மதுரை, திருவண்ணாமலை, தஞ்சாவூர் கோயில்கள் இந்த வகையினைச் சார்ந்ததாகும். பெருங்கோயில் மற்றும் மாடக்கோயில் இவை இரண்டும் ஒரே வகையான கோயிலையே குறிக்கிறது என்ற கருத்தும் நிலவுகிறது. பூமி மட்டத்திலிருந்து உயரமாக கட்டப்படுவதால் இவற்றிற்கு மலைக் கோயில் என்றும் வழங்குவர். ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கப்பட்டு ஒன்பது நிலைகளைக் கொண்ட மாடி போன்ற அமைப்புடைய கோவிகள் மாடக்கோவில்கள் என சிற்ப சாஸ்திரம் கூறுகின்றது. ஆனால் பிற்காலத்தில் மூன்று, நான்கு நிலைகளையுடைய மாடக் கோவில்களும் கட்டப்பட்டன. எழுபது, செங்கலால் ஆன மாடக்கோவில்களைக் கோச்செங்கணான் சிவபெருமானுக்காகக் கட்டினான் என தேவாரப்பாடல்கள் கூறுகின்றது. இக்கோவில்கள் யானை படுத்திருப்பது போன்ற பின்புற தோற்றத்தைக் கொண்டதால் தூங்கானை மாடக்கோவில் என்ற பெயரும் பெருங்கோவில்களுக்கு உண்டு. நன்னிலம், குடைவாயில், சிக்கல், தண்டலைச்சேரி, பெண்ணாடகம் ஆகிய ஊர்களில் இவ்வகை மாடக்கோவில்கள் உள்ளன. தஞ்சை பெரிய கோவில் , திருவானைக் கோவில் ஆகியனவும் மாடக்கோவில் வகையைச் சார்ந்த்தாகும்.

**கரக்கோயில்**

திருக்கடம்பூர் திருக்கோயில் கரக்கோயில் வகையினைச் சார்ந்தது. கரக்கோயில் வடிவமைப்பில் இரண்டு வகையான விளக்கங்கள் தரப்படுக்கின்றன. வட்டவடிவமான விமானம் கொண்டது கரக்கோவில் என்றும் நான்கு சக்கரத்துடன் கிழக்கு நோக்கி குதிரைகள் பூட்டிய தேர் போன்ற வடிவமைப்பைக் கொண்டது கரக்கோவில் என்றும் கூறப்படுகின்றது. தமிழகத்தில் இது ஒன்றே கரக்கோயில் எனக் கருதப்படுகிறது.

**இளங்கோயில்**

கருவறை மட்டும் அமைந்த கோயில். பழையக் கோயிலைச் சீரமைக்கும் பொழுது அருகில் ஒரு சிறிய கோயில் கட்டி அதில் இறைவனை எழுந்தருளச் செய்து, பிறகு கோயிலின் சீரமைப்பு பணியினைத் தொடங்குவர். இவ்வாறு கட்டப்படும் சிறு கோவில்களுக்கு இளங்கோவில் அல்லது பாலாலயம் என்பது பெயராகும். பெரும்பாலும் இக்கோவில்கள் நான்கு பட்டையுடைய விமானங்களைக் கொண்டிருக்கும். இவ்வகையில் அமைந்த இளங்கோவில்கள் திருமீயச்சூர், மற்றும் கீழைக் கடம்பூர் ஆகும்.

**கொகுடிக் கோயில்**கொகுடி முல்லையைத் தலக் கொடியாகக் கொண்டதால் கொகுடிகோயில் என வழங்கப்பட்டது. திருக்கருப்பறியல் என்னும் தலத்தின் கோயில் கொகுடிக்கோயில் வகையினைச்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

சார்ந்தது. ஸ்ரீபோகம், ஸ்ரீ விசாலம் என சிற்ப சாஸ்திரம் கூறும் கோயில் வகையில் ஒன்றே கொகுடிக்கோயில் எனக் கூறப்படுகிறது. வட்டமான சிகரம் கர்ண கூடத்துடன் இருந்தால் அது ஸ்ரீபோகமாகும். அதே அமைப்பில் இடையில் இலை வரிசை இருந்தால் அது ஸ்ரீவிசாலம் எனவும் கூறப்படுகிறது. திருக்கருப்பறியலில் உள்ள கோயிலை சுந்தரர்

**கொட்டாட்டுப் பாட்டாகி நின்றானைக்**

**குழகனைக் கொகுடிக் கோயில் – திருமுறை 7:30:3**

என்று கொகுடிக்கோயிலைப் பாடியுள்ளனர்.

**மணிக்கோயில்**

மணி போன்ற விமான அமைப்பைக் கொண்டது. அழகியச் சுதைவுருவங்கள் வண்ணம் தீட்டப்பட்டு சிற்பங்களுடன் கூடிய கோயிலாகும். விமானங்கள் எட்டு அல்லது ஆறு பட்டையுடையக் கோயில்களை மணிக்கோயில் என்று வழங்கப்படுகிறது. திருவதிகைக் கோயில் இந்த வகையினைச் சார்ந்ததாகும்.

**ஞாழற்கோயில்**

மரங்களின் நிழலில் அமைக்கப்படும் மேடைக் கோயிலாகும். மேலும் ஞாழல் எனும் மரத்தில் எழுந்தருளிய கடவுளுக்காக எழுப்பப் பெற்ற கோயில் ஞாழற்கோயில் எனக் கூறப்படுகிறது.ஆற்றங்கரையோரம் உள்ள அரசமரம், ஆலமரத்தின் நிழலில் அமைந்துள்ள பிள்ளையார் கோயில், நாகலம்மன் கோயில் இதற்குச் சான்றாகும்.

**ஆலக்கோயில்**

நான்கு புறமும் நீர்சூழந்த இடத்தில் அமைவது ஆலக்கோயில் என்றும் ஆனைக் கோயில் என்பதன் மரூஉ என்றும் கருதுகின்றனர். இக்கோயிலைப் பற்றி பல வகையானக் கருத்துகள் நிலவுகின்றன. தூங்கும் நிலையில் இருக்கும் யானையின் பின் புறத்தைப் போன்ற தோற்றமுடைய விமானம் கொண்டது, இரண்டாவது ஆல மரத்தைச் சார்ந்த கோவில்களே ஆலக்கோவில்கள் என்று சில அறிஞர்கள் கூறுவர். தஞ்சை வலிவலம், திருப்புகலூர், திருவொற்றியூர், வடதிருமுல்லைவாயில், திருவேற்காடு, திருக்கச்சூர் முதலிய தலங்கள் சான்றாகும்.

**நிறைவாக**

- பக்தி இலக்கியத்தில் அக்கால கோயில்களின் கட்டிடக்கலை அமைப்பினை அறியமுடிகிறது.
- விமானங்களின் வடிவமைப்பினைக் கொண்டு அதன் வகையினை அறியமுடிகிறது.
- பெருங்கோயில், கரக்கோயில், இளங்கோயில், கொகுடிக் கோயில், மணிக்கோயில், ஞாழற்கோயில், ஆலக்கோயில் ஆகியவை வடிவத்தின் அடிப்படையில் பெயர் பெற்றுள்ளன இதன் வழி தெரியவருகிறது.
- அடுத்த தலைமுறைக்கு இந்த கட்டிடக்கலையினை அறியச் செய்ய வேண்டும்.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

**உசாத்துணைநூற்கள்**

1. மயமுனிவர், கே.எஸ்.ஸீப்ரம்ஹண்ய சாஸ்திரிகள்(ப.ஆ), மயமதம், சரஸ்வதி மகால் நூலகம், தஞ்சாவூர், 2004.

2. ஸீப்ரம்ஹண்ய சாஸ்திரிகள். கே.எஸ். (ப.ஆ), ஸ்ரீகாசியப சில்ப சாஸ்திரம், சரஸ்வதி மகால் நூலகம், தஞ்சாவூர், 2005.

3. மாணிக்கவாசகன்.ஞா (உ.ஆ), புறநானூறு மூலமும் உரையும், உமா பதிப்பகம், பவளக்காரத் தெரு, சென்னை-01, 2019.

4. சுப்பிரமனியன்.ச.வே, பன்னிருத்திருமுறை, மணிவாசகர் பதிப்பகம்,சென்னை, 2005.